# <u>IN THE COURT OF THE PRINCIPALDISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No.169/2002**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 20.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சித்ரா Husband Name : துரைசாமி

துவக்க நேரம்: 12.03 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சுமார் 6 மாதத்திற்கு முன்பு எங்களுக்கும், எதிர்தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டிருக்குமா என்றால் ஏற்பட்டிருக்கும். மேற்படி பிரச்சினை நிலுவையில் இருக்கும்பொழுது நாங்கள் வீடு கட்டினோமா என்றால் பிரச்சினை முடித்துக் கொண்டு வீடு கட்டினோம்.

2) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை மாதங்களுக்கு முன்பு வீடு கட்ட ஆரம்பித்தோம் என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது ஆனால், 2002-ல் பாதியில் வீடு கட்ட ஆரம்பித்தோம். எதிர்தரப்பினருடன் ஏற்பட்ட பிரச்சினையை எப்படி முடித்துக்கொண்டு வீடு கட்டினோம் என்றால் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார், விசாரணைக்கு அழைத்தார்கள், ஊர் பஞ்சாயத்தார்கள் சொல்லும்படி நடந்து கொள்வதாக சொல்லிவிட்டு வந்துவிட்டோம் அப்பொழுது பஞ்சாயத்து தலைவர்

திருநாவுக்கரசு மற்றும் ஊர்காரர்கள் 10 பேரும் வந்து அளந்துவிட்டார்கள். அதன்படி வீடு கட்டினோம். இந்த தகவலை முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3) இது தொடர்பாக நாங்களும், வாதியும் பத்திரம் ஏதேனும் எழுதிக்கொண்டோமா என்றால் இல்லை. வாய்மொழியாக தீர்த்து கொண்டோம். நான் சொல்வது போல் எந்தவிதமான சமாதனமும் நடைபெறவில்லை என்றாலும் பஞ்சாயத்து தலைவரும் அளந்து கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4) காவல் நிலையத்தார் எடுக்கும் நடவடிக்கையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஊர் பஞ்சாயத்தாரை வைத்து, ஆள் பலத்தை வைத்தும் வீட்டை கட்டிக்கொள்ளலாம் என்று காவல் நிலையத்தில் சமாதானம் செய்து கொள்வதாக கூறிவிட்டு வந்து ஆள் பலத்தை வைத்து வீட்டைக் கட்டிக்கொண்டோம் என்றால் சரியல்ல.

5) பஞ்சாயத்து தலைவர் திருநாவுக்கரசு உள்ளாரா என்றால் உள்ளார். அவரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் விசாரிக்க உள்ளேன். எனது நிலத்தில் வடபுறம் மற்றும் தென்புறம் கிழமேலாக எவ்வளவு விஸ்தீரனம் என்றால் வடபுறத்தில் கிழமேலாக 27 அடியும், தென்புறத்தில் கிழமேலாக 23 1/2 அடியும் உள்ளது

6) முத்துடையார் மகன் துரைசாமி உடையார் என்பவர் எங்களுக்கு நிலத்தை விற்றவர் என்றால் சரிதான். எனது நிலத்தின் சர்வே எண்.267/4 என்றால் சரிதான். நான் வாங்கியதாக சொல்லும் நிலத்திற்கு வடபுறம் தேரடி ராஜவீதி என்றால் ச ரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா (Ex.B14) என்றால் சரிதான். இதில் வடபுறம் 8.1 மீட்டர் எனவும், தென்புறத்தில் 8.0 மீட்டர் எனவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கு பகுதி காலி இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது தெருவாகும்.

7) இந்த நத்தம் பட்டாவில் கொடுக்கப்பட்டுள்ள அளவுகள் சரியானது என்றால் ஆமாம். வடக்கு பக்கம் காலி இடம் என்று சொன்னால் தவறு என்றால் சரிதான். அது காலிஇடம் அல்ல.அது வீதியாகும். இந்த நத்தம் பட்டாவின் வடபுறம் 8.1 மீட்டர் என்பது சரியாக 26.57 அடி என்றால் சரிதான். கொஞ்சம் குறைவாகதான் உள்ளது. தென்புறத்தில் 8.0 மீட்டர் என்பது சரியாக 26 அடி என்றால் தெரியாது.

8) எனது கிரைய பத்திரத்தின்படி, தென்பகுதியில் கிழமேலாக 23 1/2 அடி என்று குறிப்பிட்டுவிட்டு, பட்டாவில் 26 அடி என்று உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களுக்கு நிலத்தை விற்றவருக்கு 1932 மற்றும் 1948ம் வருடங்கள் பத்திரங்கள் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். பூர்விக சொத்தும் இருந்தது. பூர்விக சொத்து இருந்ததற்கு ஆதாரத்தை நான் நீதிமன்றத்தில் இதுநாள்வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9) நத்தம் பட்டா(Ex.B14) படிதான், நான் கிரையம் செய்தோம் என்றால் பட்டா மற்றும் அனுபவம் செய்து வந்த இடத்தை ஊர்மக்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரை வைத்து, அளந்து அதன்பிறகு கிரையம் செய்தோம். நான் சொல்லும் பூர்விக சொத்து என்பது கற்பனையாக சொல்லுவது என்றால் சரியல்ல. விற்றவரை நான் அழைத்துவருகிறேன்.

10) என்னிடம் காட்டப்படும் என்பெயரில் உள்ள பட்டா(Ex.B1) வில், என்னுடைய சொத்து இதுதான் என்று குறிப்பிட்டு வரைபடம் எதுவும் காட்டப்படவில்லை என்றாலும், நாற்புற எல்லைகளை குறிப்பிட்டும் சொல்லபடவில்லை என்றாலும் சரிதான். துரைசாமிஉடையாருக்கு சொந்தமான பட்டாவும்(Ex.B14), என்பெயரில் வாங்கிய பட்டாவும்(Ex.B1) நாங்களே தயார் செய்தது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய பட்டாதான்.

11) துரைசாமி உடையாருக்கு வழங்கிய பட்டா எண்.175 என்றாலும், எனக்கு வழங்கிய பட்டா எண் என்னவென்றாலும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்(Ex.B1) திருத்தம் செய்து, 550 என எழுதியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்குதான் தெரியும். அவரும் தற்பொழுது இறந்துவிட்டார்.

12) இந்த பட்டாவில் முன்பு எழுதியதை வெள்ளை மை வைத்து திருத்தம் செய்துள்ளார்கள் என்றால் வெள்ளை மை வைத்து திருத்தம் செய்துள்ளது உண்மைதான். ஆனால் எதற்காக வெள்ளை மை வைத்து, திருத்தம் செய்து, பின்னிட்டு பட்டா எண் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது,எனது கணவருக்குதான் தெரியும்.

13) பட்டா (Ex.B14) தவறானது என்றும், மேலும் 1932 மற்றும் 1948 வருட கிரைய பத்திரங்களுக்கு முரணாக, என்பெயரில் உள்ள கிரையபத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு நிலத்தை விற்றவருக்கு பத்திரத்தில் எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்பதால், அவருடைய நிலத்தையும் சேர்த்து நாங்களே எழுதிக்கொண்டோம் என்றால் நாங்கள் எதையும் சேர்த்து எழுதவில்லை,1932 மற்றும் 1948 பத்திரங்களின் அடிப்படையிலும், பூர்விக சொத்தின் அனுபவத்தின் அடிப்படையிலும்தான் எழுதியுள்ளோம்.

14) என்னிடம் காட்டப்படும் ஆவணம்(Ex.B14), கடந்த 02.09.1993 தயார் செய்தது என்றும், பட்டாவை சரிபார்த்த நாள் 27.09.1993 என்றும், பட்டா வழங்கிய நாள் 24.10.1992 என்றும் தனி வட்டாசியர் தேதியிட்டு வழங்கியுள்ளார் என்றாலும் எனக்கு வீட்டை விற்றவர்கள் இதுதான் பட்டா என்று என்னிடம் கொடுத்தார்கள். கையெழுத்து

போட்டது ஒரு தேதியாக இருக்கலாம். பட்டா கொடுத்தது ஒரு தேதியாக இருக்கலாம். அதுபற்றி எனக்கு தெரியாது.

15) எனக்கு விற்ற கிரையதாரர்கள் ஒரு பொய்யான பட்டாவை தயார் செய்து, எனக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அரசாங்கத்தின் கொடுத்த பட்டா பொய்யாகாது. இது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டா இல்லையென்றாலும், இந்த பட்டாவை நாங்களே தயார் செய்துகொண்டோம் என்றாலும் சரியல்ல. அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது.

16) என்னிடம் காட்டப்படும் என் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் (Ex.B9) காலிஇடம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய கிரைய பத்திரத்தில் சர்வே எண். 151/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் பின்னிட்டு உட்பிரிவு செய்யப்பட்ட 267/4 ல் உள்ள என்னுடைய சொத்து என்று சொல்லப்படும் சொத்தில் இந்த பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

17) பட்டா (Ex.B14) ல் உள்ள வட்டாசியரால் எழுதப்பட்ட சிறிய எண் கொண்ட தேதியை என்னால் பார்த்து சாட்சியம் அளிக்கமுடிகிறது என்றாலும், தற்பொழுது என்னுடைய கிரைய ஆவணத்தில்(Ex.B9) அந்த பட்டாவில் உள்ள எழுத்துகளை விட சர்வே எண்கள் பெரிய உருவத்தில் உள்ளது என்றாலும், இந்த சர்வே எண்ணை பார்த்த என்னால் சரியாக பதில் அளிக்கமுடியவில்லை என்று சொல்கிறேன் என்றாலும் இது என்னுடைய சாட்சியத்தை வலிமையிழகக்செய்கிறது என்றாலும், கண்ணாடி அணிந்தால்தான் படிக்கமுடியும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தற்பொழுது கண்ணாடி எடுத்துவந்துள்ளேனா என்றால் இல்லை.

சாட்சி கண்ணாடி அணிந்து, பதில் அளிக்க வேண்டப்பட்டதால் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.07 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

O.S. No. 169/2002 , Dt. 20.11.2024.